பட்டுச் சேலைகளின்
சோதி கலையாகத்
கமழும் ஒரே இடம்!
இளவரசி
சேலைச் சோலை
57, இறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

மக்கள்! நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

கல்யாண, முகூர்த்தப்
பட்டுப் புடவைகளுக்கு
சைராசியான இடம்
இளவரசி
சேலைச் சோலை
57, இறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆனி 27 செவ்வாய்க்கிழமை (11 - 07 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 227

★ குண்டு வெடிப்புகளினால் குடாநாடு அதிர்கிறது

# ஷெல், விமான தாக்குதல்களினால் நேற்று மட்டும் 25 பேர் வரை பலி!

## நூற்றுக்கும் அதிகமானோர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பகுதிகள் மீது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்து நடத்திய விமானக் குண்டுவீச்சு மற்றும் அகோர ஷெல் தாக்குதல்களினால் 25 பேர் வரை உயிரிழந்தனர். சுமார் நூறு பேர் காயமடைந்தனர்; ஆலயங்கள், கடைகள், பல வீடுகள் என்பன பலத்த சேதமடைந்தன. பெருமளவு சொத்துக்கள் நாசமாகின; கால்நடைகள் அழிந்தன.

நேற்று அதிகாலை 5-30 மணியளவில் ஆரம்பித்த ஷெல் தாக்குதல்கள் மாலை வரை தொடர்ந்தன.

பல நூற்றுக்கணக்கான ஷெல்கள் பெருத்த சத்தத்தோடு பல பகுதிகளிலும் விழுந்து வெடித்ததால் யாழ் குடாநாடு அதிர்ந்தது. மக்கள் தொடர்ந்து பீதியில் ஆழ்ந்து கிடந்தனர்.

திடீர் திடீரென வந்த சுப்பசொனிக் மற்றும் புக்காரா விமானங்கள் நான்கு, ஐந்து குண்டுகளை ஒரே நேரத்தில் ஆங்காங்கே பொதுமக்கள் குடியிருப்புகள் மீது வீசி பல அப்பாவி மக்களைக் கொன்றழித்ததுடன், மக்களை கலக்கமுற வைத்தன.

நேற்றைய தாக்குதல்களினால் தொடர்ந்து குடாநாட்டில் வழமையான வாழ்க்கை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

ஆனைக்கோட்டை பகுதியில் மட்டும் ஷெல் தாக்குதல்களினால் ஏழு பேர் உயிரிழந்தனர். இணுவில், கொக்குவில், தாவடிப் பகுதியில் விமானக் குண்டு வீச்சினால் அப்பாவிப் பொதுமக்கள் பதினொரு பேர் கொல்லப்பட்டனர்.

அராலிப் பகுதியில் நேற்றுக் காலை 10 மணியளவில் விழுந்து வெடித்த ஷெல்லுக்கு நாராயணசிங்கம் (வயது 55) என்பவர் உயிரிழந்தார். அவரது மனைவியும் இரு பிள்ளைகளும் காயமுற்றனர்.

சங்கரத்தைப் பகுதியில் நேற்று மாலை 4-30 மணிக்கு இடம்பெற்ற புக்காரா குண்டு வீச்சில் 13 வயது மதிக்கத்தக்க சிறுமி ஒருவர் உயிரிழந்தார். அச்சிறுமியின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

மானிப்பாய், மருதனார்மடம் பகுதிகளில் நேற்று இடம்பெற்ற ஷெல்தாக்குதல்களில் இருவர் உயிரிழந்தனர். அவர்களின் சடலங்களும் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. (உ-15)

# 3 லட்சத்துக்கும் அதிக மக்கள் 2 நாட்களில் அகதிகளாயினர்!

## தொடர்ந்து இடம்பெயர்ந்து அவலம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

வலிகாமம் மேற்கு மற்றும் வலிகாமம் வடக்குப் பகுதிகள் மீது ஸ்ரீலங்காவின் முப்படையினரும் தொடுத்திருக்கும் பெரும் இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த இரண்டு நாட்களில் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகியிருப்பதாக உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

மக்கள் ஆயிரக் கணக்கில் இடத்துக்கு இடம் கூட்டமாக இடம் பெயர்ந்து சென்று அவலப்படுவதை அவதானிக்க முடிகிறது.

நேற்று முன்தினம் காலையில் ஆரம்பமான மக்களின் இடம் பெயர்வு நேற்று இச்செய்தி அச்சுக்குப் போகும் போதும் தொடர்ந்து கொண்டிருந்தது.

நேற்று மாலை வரை இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்தைத் தாண்டி விட்டதாக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய், சங்கானை உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் முழுமையாக இடம் பெயர்ந்து விட்டனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 62 ஆயிரம் மக்களும் —

சங்கானை பிரதேசசெயலர் பிரிவில் 62 ஆயிரம்மக்களும்—

உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 56ஆயிரம் மக்களும்—

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 27 ஆயிரத்து 600 பேரும் —

யாழ். பிரதேசசெயலர் பிரிவில் 20 ஆயிரம் மக்களும் —

ஏற்கனவே இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசித்த மக்களுமாக —

மொத்தம் 3 லட்சத்துக்கு மேற்பட்டவர்கள் இடம் பெயர்ந்துள்ளனர் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலைகள் அனைத்தும் மூடப்பட்டன!

யாழ்ப்பாணம், ஜூலை 11

தற்போதைய யுத்த நிலைமையால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கி இருப்பதாலும்—

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வசதியீனங்கள் இருப்பதாலும் — யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளையும் மூடி வைக்கும்படி வலயம் - 1, வலயம் - 2 கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் தேவைப்படுமிடத்து இடம்பெயர்ந்த மக்கள் தங்குவதற்கு பாடசாலைகளில் வசதிகளை செய்து கொடுக்கும்படி அதிபர்களும் ஆசிரியர்களும் கோரப்பட்டுள்ளனர். (இ)

## ஹெலிக்கொப்டரை புலிகள் சுட்டு வீழ்த்தினர்!

யாழ்ப்பாணம், ஜூலை 11

விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையே தொடர்ந்து நடைபெற்றுவரும் சமரில் ஹெலிக்கொப்டர் ஒன்று நேற்று விடுதலைப்புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.

நேற்று முன்தினம் புலிகளின் தாக்குதலில் சேதமடைந்த அதே ஹெலிக்கொப்டரே நேற்று மீண்டும் தாக்குதலுக்கு இலக்கானது என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதலுக்கு இலக்கான ஹெலியை பலாலியில் தரையிறக்க விமானி முயன்றபோதும் அது கைகூடாமற் போகவே அதனை மாதகல் பகுதியில் அவசர அவசரமாகத் தரையிறக்க முயன்றார், என்றும் —

அச்சமயம் ஹெலி தரையில் மோதி வீழ்ந்தது என்றும் —

ஹெலியில் இருந்த அதிகாரி ஒருவர் படுகாயமடைந்தார் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

[ஐ-3-4-6]

## மேலும் துருப்புக்கள் நேற்றும் குவிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 11

மேலும் பல நூற்றுக்கணக்கான துருப்புகளும், ஆயுத தளபாடங்களும் நேற்று காங்கேசன்துறைக்குக் கொண்டு வந்து இறக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

சுமார் பதினாறு கடற்படைக் கப்பல்கள் தொடர் அணியாக நேற்று காங்கேசன்துறைக்கு வந்ததாகவும் —

அவற்றில் துருப்புகளும், ஆயுத தளபாடங்களும் கொண்டு வரப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இக்கடற்படை கப்பல் அணி நேற்று காங்கேசன்துறை நோக்கி வந்து கொண்டிருந்த போது ஹெலிகளும் டோறா படகுகளும் அந்த அணிக்கு பாதுகாப்பு வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## தொடர்ந்து சண்டை

யாழ்ப்பாணம், ஜூலை 11

வலி. மேற்கு, வலி வடக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் முன்னேற முயற்சிக்கும் இடங்களில் தொடர்ந்து சண்டை இடம்பெற்று வருவதாக கொழும்பின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சண்டிலிப்பாய், மூளாய்ப் பகுதிகளில் படையினர் முன்னேறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும்—

அப்பிரதேசங்களில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## செயலகத் தொலைபேசி திடீரெனத் துண்டிப்பு!

கடந்த இரு தினங்களாக படையினர் யாழ் மாவட்டத்தில் மேற்கொண்டு வரும் கொடூரத் தாக்குதல் பற்றிய உண்மைத் தகவல்கள் கொழும்பு செல்வதை தடுக்கும் வகையில் யாழ். செயலக தொலைபேசியை பலாலி இராணுவத்தினர் நேற்று திடீரென செயல் இழக்கச் செய்தனர்.

நேற்று முன்தினம் நவாலியில் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல் உட்பட ஏனையதாக்குதல்கள் குறித்து செயலக அதிகாரிகள் கொழும்புக்கு நேற்றுக் காலை தகவல்களை அனுப்பிக்கொண்டிருந்தாகவும் —

அச்சமயம் பலாலி இராணுவத்தினரால் தொலைபேசி திடீரென செயல் இழக்க செய்யப்பட்டதாகவும் தெரிய வந்தது. (உ 3)

### நேற்றைய தாக்குதல்களில் காயமடைந்தோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜூலை 11

நேற்று ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பரவலாக நடத்திய ஷெல் மற்றும் விமானத் தாக்குதல்களில் காயமுற்ற சுமார் நூறு பேரில் 78 பேரின் விவரம் வருமாறு:—

இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

★ தேவானந்தன் அனுஷியா — வயது 7, சுழிபுரம்.
★ ரூபசிங்கம் ஜனார்த்தனன் — வயது 10, சுழிபுரம்.
★ சுப்பிரமணியம் விக்கினேஸ்வரி — வயது 21, வடலியடைப்பு.
★ வைரமுத்து சிவராசா — வயது 40, வடலியடைப்பு.
★ சிவராசா உமையாளினி — வயது 10, வடலியடைப்பு.
★ சிவராசா தாட்சாயினி — வயது 7, வடலியடைப்பு.
★ வ. திலகவதி — வயது 21, வடலியடைப்பு
★ திருமேனி கிருபாகரன் — வயது 10, வடலியடைப்பு.

(3 ஆம் பக்கம் பார்க்க)

### எழுபது சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 11

நேற்றும் நேற்று முன்தினமும் இராணுவ நடவடிக்கைகளினால் உயிரிழந்த நூற்றுக்கும் அதிகமானோரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டன.

நேற்று மாலை வரை அவற்றில் எழுபது சடலங்கள் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டு ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்துச் செல்லப்பட்டன.

நேற்று முன்தினம் உயிரிழந்தவர்களின் சடலங்களில் 58 நேற்று மாலை வரை அடையாளம் காணப்பட்டன.

★ த. புஷ்பராணி — பண்டத்தரிப்பு, காலையடி
★ த. வசந்தமலர் — பண்டத்தரிப்பு, காலையடி
★ சத்தியநாதன் — சுழிபுரம், கலப்பிலோ
★ கோபிநாத் — உடுவில்
★ துரைராசா — சங்கானை
★ இதயசாந்தினி — நவாலி வடக்கு
★ சதீஷ்குமார் — நவாலி வடக்கு
★ உதயகுமார் — நவாலி வடக்கு

(3 ஆம் பக்கம் பார்க்க)

# 200 பொதுமக்கள் இதுவரையில் பலி!

யாழ்ப்பாணம், ஜூலை 11

கடந்த இரு நாட்களாக யாழ். குடாநாட்டு மக்கள் மீது ஸ்ரீலங்காவின் முப்படையினரும் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களில் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் எண்ணிக்கை இருநூறைத் தாண்டியுள்ளது.

இந்த விவரத்தை "புலிகளின் குரல்" வானொலி நேற்று வெளியிட்டது. "புலிகளின் குரல்" மேலும் தெரிவித்ததாவது:-

பல இடங்களில் கொல்லப்பட்ட மக்களின் சடலங்கள் இதுவரை மீட்கப்படாத நிலையில் வீதிகளில் சிதறுண்டும், இடிபாடுகளுக்குள் அகப்பட்டும் உள்ளன.

இவற்றில் 115 சடலங்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டன.

இவற்றில் 85 சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன ஏனைய சடலங்கள் உருக்குலைந்த நிலையில் உள்ளதால் அவற்றை அடையா

(3 ஆம் பக்கம் பார்க்க)

# ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று ஷெல்லுக்கு ஏழு பேர் பலி!

### 30 பேர் காயம்!! வீடுகள் சேதம்!!!

யாழ்ப்பாணம், ஜூலை 11

நேற்றுக் காலை 5-30மணி முதல் 7 மணி வரை ஆனைக்கோட்டைப் பகுதி மீது பரவலாக நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களில் ஏழு பேர் உயிரிழந்தனர்; சுமார் முப்பது பேர் காயமடைந்தனர்; பல வீடுகள், உடைமைகள் சேதமுற்றன.

வட்டுக்கோட்டை, சங்கரத்தை, சுழிபுரம் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டைப் பகுதியில் —மூத்தநயினார் கோயில் உட்பட—பல கோயில்களிலும் பொது இடங்களிலும் தஞ்சம் புகுந்திருந்த பொது மக்கள், அதிகாலை வேளையில் நடத்தப்பட்ட இந்த ஷெல் தாக்குதல்களினால், கலவரமடைந்து தஞ்சம் புகுந்த இடங்களில் இருந்து மூடை முடிச்சுகளுடன் யாழ் நகரப் பக்கமாக ஓடித்தப்பினர்.

இப்பகுதியில் [illegible] ஷெல் தாக்குதல்களினால் உயிரிழந்த ஏழு [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இணுவில், தாவடி, கொக்குவிலில் புக்காரா அகோர குண்டுவீச்சு!

### பதினொரு பேர் பலி!! 35 பேர் படுகாயம்!!!

யாழ்ப்பாணம், ஜூலை 11

இணுவில், தாவடி, கொக்குவில் பகுதியில் நேற்று முற்[illegible] ஐவர் உட்பட பதினொரு பொது மக்கள் உயிரிழந்தனர்; 35 பேர் வரை காயமடைந்தனர். [illegible] தாவடி முருகமூர்த்தி கோவில் பகுதி, இணுவில் துரை வீதிப் பகுதி, கொக்குவில் கே. கே. எஸ். வீதி — சம்பியன் ஒழுங்கை சந்திப்பு பகுதி கொக்குவில் மேற்கு கேணியடிப் பகுதி ஆகியவற்றின் மீது மூன்று தடவைகள் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த விமானத் தாக்குதல்கள் மற்றும் அகோர ஷெல் தாக்குதல்கள் காரணமாக இணுவில், தாவடி, கொக்குவில், கோண்டாவில் மேற்கு பகுதி மக்கள் நேற்றும் பெரும் எண்ணிக்கையில் இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

றேணியோ பிரதி

100 பிரதி செய்ய இருபத்தைந்திற்கும் 30/- மட்டுமே. அறவிடப்படுகிறது தரமான பிரதி உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படுகிறது "அறிவகம்" 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [சி-1721]

## செஞ்சிலுவை அதிகாரி பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 11
நேற்று முன்தினம் புக்காரா குண்டு வீச்சுக்கு இலக்கான நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியை செஞ்சிலுவைச்சங்கசர்வதேசக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி திரு. ஜோர்ஜ் குன்ஸ் நேற்றுக் காலை பார்வையிட்டார்.

கடந்த இரு தினங்களாக குடா நாட்டில் இராணுவ நடவடிக்கைகளால் ஏற்பட்ட உயிரிழப்புகள், சேதவிவரங்கள் தொடர்பான அறிக்கை ஒன்றை அவர் தமது கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பியுள்ளார்.

அந்த அறிக்கை பின்னர் ஜெனீவா தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அறியவந்தது.

இதற்கிடையில்—
யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோருக்குத் தேவையான அவசர மருந்துப் பொருட்களை திரு. ஜோர்ஜ் குன்ஸ் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் கையளித்தார். [ஐ-3]

## ஆகா சுகி விடுதலை

லண்டன், ஜூலை 11
கடந்த ஆறு வருட காலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த மியான்மார் [பர்மா] நாட்டு எதிர்க்கட்சித் தலைவியான ஆகா சுகியை நிபந்தனை ஏதுமின்றி பர்மா இராணுவ ஆட்சியாளர்கள் நேற்று விடுவித்தனர்.
1989 ஜூலை மாதம் முதல் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஆகா சுகி, 1990 மே மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரு வெற்றியீட்டிய போதிலும்—
அவரிடம் ஆட்சியை ஒப்படைக்க இராணுவ ஆட்சியாளர்கள் மறுத்ததுடன் அவரைத் தொடர்ந்து வீட்டுக் காவலில் வைத்திருந்தனர்.
1991 இல் சமாதானத்துக்கான நோபல் பரிசு ஆகா சுகிக்கு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. [உ]

## மாணவர் அமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 11
விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பின் உறுப்பினர்களுக்கான கூட்டம்—தென்மராட்சிப் பகுதியினருக்கு — சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், வலிகாமம் பகுதியினருக்கு யாழ். தொழில் நுட்பக்கல்லூரியிலும் இன்று காலை 10 மணிக்கு நடைபெறவிருக்கிறது. [ஐ-3]

## விஞ்ஞான செய்முறைத் தேர்வு

தமிழ்ழ பொதுக் கல்வித் தேர்வுக்கான விஞ்ஞான செய்முறைத் தேர்வும் —
அதற்காக நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த அறிவுறுத்தற் கூட்டமும் — பிற்போடப்பட்டுள்ளன.
இவற்றுக்கான புதிய திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் எனத் தேர்வு ஆணையாளர் அறிவித்துள்ளார். (இ)

## பல்கலை மாணவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11
இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த சுமார் 4 ஆயிரம் பேர் யாழ். பல்கலைக்கழகத்தில் தங்கியுள்ளனர்.
இவர்களைப் பராமரிக்கும் சேவையில் ஈடுபட ஆளணி தேவைப்படுவதால் பல்கலைக்கழக மாணவர்களை இன்று காலை பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

---

நயினை

## ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

எல்லாம் அறிபவளே எங்கும் நிறைபவளே
நிலையிலா வாழ்க்கை நிலை கெடுமுன் அம்பாளே
மேலான வாழ்வும் மெலியாத கீர்த்தியும்
அருள்வாய் நயினை நாகேஸ்வரியே.

கொடுமைகள் பல சூழ்ந்து என் மனதை கொல்லுதம்மா
போதுமம்மா வேதனைகள் பொறுத்திடவும் முடியவில்லை
இன்பமும், துன்பமும் உண்டென்று கூறிடினும்
துன்பமே தனித்து நிற்கும் துயர் தீர்க்க வாராய் அம்மா!

இ. கிருபானந்தா,
நயினாதீவு.

[37460]

---

## கிறிஸ்துவுக்காக இளைஞர்

12-07-1995 (புதன்கிழமை) சென் மேரிஸ் ஆலயம், கோப்பாயில் நடைபெறவிருந்த "வாலிபர்களுக்கான ஒன்றுகூடல்" பிற்போடப்பட்டுள்ளது.
- செயற்குழு.

462, பிரதான வீதி,
கண்டிக்குளி.

(37462)

---

## 5-ம் ஆண்டு இதய அஞ்சலி



### இராஜா ஸ்ரீ. பிரபாகரன்

தாயின் மடியில்: 2:-05-1962
இறைவன் அடியில்: 07-07-1990

அன்பே ஐந்து ஆண்டுகளாக கலங்கும் நாம் உமது ஆத்மசாந்திக்காக என்றும் இறைவனை வேண்டுகிறோம்.

உமது பிரிவால் துயருறும்,
மனைவி, தாய், சகோதரன்,
உற்றார், உறவினர்.

64/3 பருத்தித்துறைவீதி,
யாழ்ப்பாணம்.

[37438]

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05-02-1956
ஆண்டவன் அடியில்: 02-07-1993

### திருமதி சிவகுருநாதன் இந்துமதி

திதி: சதுர்த்ததி 11-07-1995

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல்லஃதுறும் கழுமலவளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகையிருந்ததே"

உனது கல்வித்திறமையால் பல அரசாங்க பதவிகளைப் பெற்றும் நல்வாழ்க்கையைத் தேடியடைந்தும் யாவும் குறைவில் உதவிட்டு எந்நேரமும் உன் நினைவால் துடிக்கும் கணவன், அம்மா, அக்காமார், அத்தான்மார், பெறாமகன் யாவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு எங்கோடி மறைந்தாய் எங்கள் செல்வமே!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

திருமதி கணபதிப்பிள்ளை, மனோன்மணி.
[தாய்]

சுதுமலை மேற்கு.
மானிப்பாய்.

(37397)

---

யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவுச் சபை

## அனைத்துலக கூட்டுறவு தினம் - 1995 கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை 1995 அனைத்துலக கூட்டுறவு தினம் தொடர்பாக பொது மக்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்த உத்தேசித்துள்ளது. இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கீழ் வரும் தலையங்கங்களில் ஒன்றை தெரிவு செய்து தமது கட்டுரைகளை 30-07-95 ஆம் திகதிக்கு முன்னதாக "கூட்டுறவு தினவிழா குழு", யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "கட்டுரைப்போட்டி" என குறிப்பிடல் வேண்டும்.

விடயங்கள்

1. கூட்டுறவு வளர்ச்சிக்கு கூட்டுறவுக் கல்வியின் முக்கியத்துவமும், வளர்ச்சிப்படி முறைகளும்.
2. சமூக மேம்பாட்டுக்கு கூட்டுறவின் முக்கியத்துவமும், வளர்ச்சிப்படி முறைகளும்.
3. 'தனக்காகவும், பிறருக்காகவும் வாழ்கின்ற மனோ நிலையை கூட்டுறவு உருவாக்கிறது" என்பதே கூட்டுறவின் அடிப்படையாகும்.
4. இலங்கை கூட்டுறவின் வளர்ச்சியில் கூட்டுறவுக் கல்லூரிகளின் பங்கு.

கட்டுரை புள்ஸ்காப் பேப்பரில் (கோடிட்ட தாளில்) 10 பங்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

- மாவட்டச் செயலாளர்.

(சி-1628)

---

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ். மாவட்டம்

12-07-1995 இல் நடைபெறவிருந்த விசேட பொதுக்கூட்டங்கள் இரண்டும் பிற்போடப்பட்டுள்ளதை அனைத்து உறுப்பினர்களுக்கும் அறியத்தருகிறேன்.

பொதுச்செயலாளர்,
யாழ். மாவட்டம்.

(சி-1632)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11-08-1949
மறைவு: 21-06-1994

### இரத்தினசிங்கம் மணிவண்ணன்

(முன்னைநாள் ஆசிரியர் யாழ். இந்துக்கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி)

திதி: 11-07-1995

தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, மகன்,
மற்றும் உற்றார், உறவினர்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை,
மானிப்பாய்.

(37450)

---

## தேடுகிறார்

சண்டிலிப்பாயில் இருந்து இடம்பெயர்ந்த மகேந்திரன் ஜெகன், சபாபதி அன்னப்பிள்ளை, சுப்பிரமணியம் கந்தையா, சுப்பிரமணியம் ஆசைப்பிள்ளை ஆகியோரை மருமகன் தேடுகிறார்.

தொடர்பு:-
ச. மகேந்திரன்.
C/O சமரக்கொடி
958/19 தலையாழி,
K.K.S. வீதி,
யாழ்ப்பாணம்.

(37467)

---

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி கமலாதேவி கணேசலிங்கம்

[நிதி உதவியாளர், ப. அ. சபை, பொருளாளர், பணியாளர், நலன்புரி சங்கம் ப. அ. சபை,]

பனை அபிவிருத்திச் சபையில் கடமையாற்றி 09-07-1995 அன்று அகாலமரணம் அடைந்து விட்டார். இவருக்கு எமது கண்ணீரஞ்சலியைச் செலுத்துவதோடு இவரைப் பிரிந்து துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைச் செலுத்துகின்றோம்.

பணியாளர், நலன்புரி சங்கம்,
பனை அபிவிருத்திச்சபை.

(37463)

---

# நல்லூர் உற்சவ கால வியாபார நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 11
அடுத்த மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ள நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை ஒட்டி ஆலய சுற்றாடலில் தற்காலிக வியாபார நிலையங்களை அமைப்பது தொடர்பாக தமிழீழ நிர்வாக சேவையினர் அறிவுறுத்தல்களை விடுத்துள்ளனர். அவை வருமாறு:
பருத்தித்துறைவீதி, கோயில் வீதி செட்டித்தெரு போன்ற வீதிகளில் அமையப்பெறும் வீதித் தடைகளுக்குஉள்ளாக ஏற்கெனவே மாநகரசபையினால் அனுமதிக்கப்பட்ட வியாபார உருமத்திற்குரிய அமைவிடத்தில் மாற்றுவிற்பனைப் பொருள்களை விற்கவிரும்புபவர்கள்.—
தமது குடியிருப்பு நிலப்பரப்பினுள் வியாபார அமைவிடங்களை அமைக்க விரும்புபவர்கள், ஆகியோர் தமிழீழ நிர்வாக சேவையினால் வழங்கப்படும் உரிய விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 14-07-1995 காலை 10-00 மணிக்கு முன்பாக ஒப்படைக்க வேண்டும்.
விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அதற்கான அனுமதி வழங்கப்படும் எக்காரணம் கொண்டும் தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. (ஐ)

## அலுவலகம் இடமாற்றம்

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வந்த மலேரியா தடுப்பு இயக்க யாழ். பிராந்திய அலுவலகம், கடந்த திங்கள் முதல், விக்டோரியா வீதியில் உள்ள யாழ். பிராந்திய பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு நிரந்தரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (எ-4)

---

வண்ணை

## ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயம்

11-07-1995
மூன்று சித்திரத் தேர்களில் மும்மூர்த்திகள் பவனி வரும்

### தேர்த்திருவிழா

காலை 7-00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
மு. பகல் 10-00 மணிக்கு பச்சை சாற்றி விசேட பூஜை

12-07-1995 புதன் நாளை

### தீர்த்தத் திருவிழா

காலை 9-00 மணிக்கு வசந்த மண்டப பூஜை
காலை 10-00 மணிக்கு தீர்த்தம்
மாலை 5-00 மணிக்கு துவஜ அவரோகணம் (கொடி இறக்கம்)

இரவு குருக்களை கௌரவித்தல்
அதைத் தொடர்ந்து
ஆஸ்தான தவில் வித்துவான் நல்லூர்
ந. உதயகுமார் குழுவினர்
பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவர்

திரு. உதயகுமாரால்
ஆலயத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு ஆற்றிய சேவையையும், கலைத் திறனையும் பாராட்டி மேன் மேலும் தமிழ் இசைத் தென்றல்களாக வளர்ந்திட அம்பாளை வேண்டி

தவில்மேதை
வலங்கைமான் சண்முக சுந்தரம்பிள்ளையின் மாணவன்

- ✶ தவில் வித்துவான் செல்வன் இ. ஆனந்தகணேசன்
- ✶ நாதஸ்வர வித்துவான் திரு. மு. பிரேமானந்

இருவருக்கும் பரிபாலன சபையின் சார்பில்
நாதஸ்வரமேதை
திருவாளர் S. S. சிதம்பரநாதன் அவர்களால்

### தங்கப் பதக்கம்

அணிவித்து பாராட்டப்படுவர்

அடுத்து உற்சவ காலத்தில் சொற்பொழிவாற்றிய திருவாளர் காரை. சிவராஜ சர்மா அவர்களை கௌரவித்தல்

இறுதியாக குருக்கள் ஆசீர்வாதம் பெறுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெறும்

13-07-1995 மாலை
பூங்காவன உற்சவம்

- பரிபாலன சபையினர்.

விழாக்கள் சிறப்புற அம்பாளை வேண்டும்:
இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

[37451]

---

## அறிவித்தல்

சுகாதார சேவைகள் திணைக்களம்
யாழ்ப்பாணம்

இடம்பெயர்ந்த சுகாதார சேவை உத்தியோகத்தர்களான வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் பதிவு பெற்ற மருத்துவர்கள், உதவி மருத்துவர்கள் அனைவரும் தாம் தற்போது இடம் பெயர்ந்துள்ள பகுதிகளில் இருக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுடன் விரைவில் தொடர்பு கொண்டு தங்களின் சேவைகளை உரிய இடங்களுக்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்,

அத்துடன் யாழ். மாநகரசபை எல்லைக்குள்ளும், அதனை அண்டிய பகுதிகளிலும் இடம் பெயர்ந்து இருக்கும் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் எனது அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வைத்தியகலாநிதி வை. ஸ்ரீகாந்தா,
மாகாணப்பிரதிப் பணிப்பாளர்.

[சி-1633]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## உண்மை உறங்காது

ஸ்ரீலங்கா இராணுவம் நேற்று முன்தினம் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு பகுதிகளில் நடத்திய இராணுவத் தாக்குதல்களால் [இதனை எழுதும் வரை] இருநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். முந்நூறுக்கு அதிகமானோர் காயமடைந்துள்ளனர். மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் வாழ்ந்த வீடு வாசல்களை விட்டு இடம் பெயர்ந்துள்ளனர். இவர்களில் கணிசமானவர்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்குக் கிராமங்களில் வாழ்ந்தவர்கள்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தொடக்கம் கடந்த இரண்டு நாட்களாக யாழ். நகரிலும் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வீதிகளில் மக்கள் தலையில் மூட்டைகளுடனும் இடுப்பில் சிறு குழந்தைகளுடனும் எங்கே போவது எங்கு தங்குவது என்பது தெரி தெரியாமல் வீதிகளில் பதற்ற முற்ற நிலையில் சாரிசாரியாக அலைந்து திரிந்தனர்.

பாடசாலைகளிலும் ஏனைய இடங்களிலும் திறக்கப்பட்ட இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியிருப்போருக்கு மேலதிகமானோர் நேற்று மாலையிலும் இவ்வாறு அலைந்து திரிவதைக் காணமுடிந்தது.

இராணுவத்தினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களாலும், கண்டபடி நடத்தப்படும் விமானக்குண்டு வீச்சுக்களாலுமே பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

கால் நடையாக இடம் பெயர்ந்தோர் தமது வழியில் இளைப்பாறுவதற்காக நவாலி தேவாலயத்தில் தங்கி நின்ற வேளை அவர்கள் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலால் குழந்தைகள், முதியவர்கள், நோயாளிகள் உட்பட 100க்கும் மேற்பட்டோர், துடிக்கப் பதைக்கக் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் பொதுமக்களை இலக்கு வைத்து நடத்தப்படும் தாக்குதல்களுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

பொதுமக்களுக்குப் பாதிப்பு இல்லாத முறையிலேயே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அரசாங்கத் தரப்பு, இராணுவத்தரப்புக் கூறுவதற்கு முற்றிலும் எதிர்மாறாகவே தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

இராணுவம் தனது நிலையில் இருந்து முன்னேறுவதற்காக சரமாரியாக, கண்மூடித்தனமாக குடிமனைகள் மீது ஷெல் வீச்சு நடத்துவதும் இடம் பெயர்வதற்காக வீதிகளால் கூட்டமாகச் செல்லும் மக்கள்மீது குண்டு வீச்சு நடத்துவதும் பொதுமக்களுக்குப் பாதிப்பு உண்டாக்காத இராணுவநடவடிக்கைகளா? இராணுவமும், அதனை மேற்கோள் காட்டி வெளிநாட்டுச் செய்திச்சேவைகளும் அவ்வாறு அறிவிப்பது முற்றிலும் பொய்யானது.

குடிமனைகள் மீதும் மக்கள் கூடும் இடங்கள் மீதும் தாக்குதல் நடத்தும் போது பொதுமக்கள் பாதிக்கப்படாதிருப்பது எப்படி? இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளுக்கு வெளியே, கொழும்பில், வெளிநாடுகளில் உள்ளோர் இதனை நம்பினால் அவர்களது பொது அறிவு மிகவும் மந்தமானது என்பதே அர்த்தம்.

பெரும் எடுப்பில் நடத்தப்படும் இராணுவத் தாக்குதல் தமிழ் மக்களை அழிக்கும் நோக்கம் கொண்டதே என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இரண்டு நாள்களில் இத்தனை பெரும் எண்ணிக்கையான மக்களை கொன்று குவித்துவிட்டு, அவர்களை விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிப்பதற்காகவே இராணுவ நடவடிக்கை நடத்தப்படுவதாக அரசாங்கம் வேறு கூறுகிறது!

தான் கூறும் பொய்யையே கொழும்பில் உள்ளவர்களும், வெளிநாடுகளும் நம்ப வேண்டும்; உண்மையாகவே நடப்பதை மற்றவர்கள் நம்பக்கூடாது என்று ஸ்ரீலங்கா இராணுவமும், அரசும் விரும்பினாலும் அது தற்காலிகமாகவே நிலைக்கும்.

உண்மை ஒரு நாளும் சாவதில்லை; சில சமயங்களில் உறங்கக்கூடும்; ஆனால் என்றோ ஒருநாள் உயிர்த்தெழுந்து அதனை மறைக்க முயன்றவனைத் தண்டிக்கும்.

# பல்லாயிரக்கணக்கான மக்கள் தென்மராட்சிக்கு இடம் பெயர்வு

## தெருத் தெருவாக மக்கள் கூட்டம் நிரம்பி வழிகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 11

வலி.மேற்கு, வலி வடக்கு, வலி. தெற்கு பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தென்மராட்சிப் பகுதியை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர்.

நேற்றுக்காலை முதல் வண்டில்கள், லான்ட்மாஸ்டர்கள் மற்றும் வாகனங்களிலும் கால்நடையாகவும் மக்கள், பயம் பீதி, கலவரத்துடன் சென்றுகொண்டிருப்பதைக் காண முடிந்தது.

வண்டில்கள், லான்ட்மாஸ்டர்களில் மூட்டை முடிச்சுக்களைக் கட்டிக்கொண்டு பின்னால் நடந்தும் சைக்கிள்களிலும் மக்கள் கண்டி வீதியூடாக சாரி, சாரியாக நேற்றுக் காலை முதல் சென்றபடி இருந்தனர்.

பல ஆயிரக்கணக்கானோர் கையில் கிடைத்த ஒரு சில முடிச்சுகளுடன் சைக்கிள்களில் களைத்த நிலையில் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

சாவகச்சேரி முதல் யாழ்ப்பாணம் வரை கண்டி வீதி முழுவதும் நேற்றுக்காலை இடம்பெயர்ந்த மக்களின் கூட்டம் நிரம்பி வழிந்தது. பச்சிளம் குழந்தைகளை கைகளில் தாங்கியபடி பலரும் எங்கு போவது என்று தெரியாத நிலையில் கண்டி வீதி வழியே சென்றுகொண்டிருந்தனர்.

கண்டி வீதியில் போக்குவரத்து செய்ய முடியாத அளவுக்கு அதிக மக்கள் தென்மராட்சிப் பக்கமாகப் படையெடுத்தபடி இருந்தனர். பலர் நடக்க முடியாத நிலையில் வீதியோரங்களில் மரங்களின் கீழ் ஓய்வு எடுத்தபடி இருந்தனர். இன்னும் பலர் இடம் ஏதும் தெரியாது அவதிப்பட்டுக்கொண்டிருந்தனர்.

நேற்றுக் காலை சுமார் இரண்டு, மூன்று மணித்தியாலயங்களில் மட்டும் பல ஆயிரக்கணக்கானோர் தென்மராட்சியைச் சென்றடைந்தனர். [ஒ]

## கடைகளை திறக்குமாறு வணிக கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 11

கடைகளைத் திறந்து அத்தியாவசியப் பொருள்களை விநியோகிக்குமாறு யாழ். மாவட்ட வணிக கழகங்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஸ்ரீலங்காவின் இன்றைய கொடியஇன அழிப்பு உக்கிரம் பெற்றுள்ள இவ்வேளையில், வர்த்தக ஸ்தாபனங்களைத் திறந்து அத்தியாவசியமான பொருள்களை விநியோகித்து மனித நேயத்துடன் செயற்படுமாறு செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் யாழ். மாவட்ட வணிக கழகங்களின் இணையம் கோரிக்கை விடுத்துள்ளது.

தற்போதையஇராணுவநடவடிக்கை காரணமாக வர்த்தக ஸ்தாபனங்கள் பல மூடப்பட்டிருப்பதால் அத்தியாவசிய பொருள்களை வாங்குவதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## ஒரு வயது குழந்தையை தவறவிட்டு வந்தார் தாய்!

### அளவெட்டியில் சம்பவம்

அளவெட்டி, ஜூலை 11

நேற்று முன்தினம் ஆரம்பமான இராணுவ நடவடிக்கையின் போது அளவெட்டிப் பகுதி மக்கள் அவசர அவசரமாக வெளியேறினார்.

இவ்வாறு பதற்றத்துடன் வெளியேறிய தாய் ஒருவர், தனது ஒருவயதுக் குழந்தையை ஏணைக்குள் விட்டு விட்டு வந்துவிட்டார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் தங்கியிருந்த அந்தத் தாய் கதறி அழுதபடி இருந்தார்.

தனது தாய் (பாட்டி) குழந்தையைத் தூக்கிவருவார் என்று நினைத்து அவர் அவசரம் — பதற்றத்தில் அங்கிருந்து வந்துவிட்டார்.

குழந்தைக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் அந்தத்தாய் அலறிக்கொண்டிருக்கிறார். (ஓ-13)

## எழுபது சடலங்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

- ★ நாகமுத்து — நவாலி வடக்கு
- ★ எஸ். ஹேமலதா — வயது 27, நவாலி வடக்கு கிராம சேவையாளர்.
- ★ எஸ். பிரதீபா — வயது 11, நவாலி தெற்கு.
- ★ துஷித்திரா — நவாலி தெற்கு.
- ★ கேதீஸ்வரன் — நவாலி தெற்கு.
- ★ யோகேஸ்வரி — நவாலி தெற்கு.
- ★ புஷ்பராணி — கட்டுடை.
- ★ குணரட்ணம் — சுழிபுரம் மேற்கு.
- ★ ரோஹினி — சுழிபுரம் மேற்கு.
- ★ தர்ஷினி — சுழிபுரம் மேற்கு.
- ★ பிரணவன் — சுழிபுரம் மேற்கு.
- ★ யசிந்தா சுழிபுரம் மேற்கு.
- ★ க. அஞ்சலாதேவி — கட்டுவன்
- ★ ஜெகதீபன் — நவாலி.
- ★ கந்தசாமி — தெல்லிப்பளை.
- ★ சண்முகநாதன் — சுழிபுரம் மேற்கு.
- ★ ச பராசக்தி — சுழிபுரம் மேற்கு.
- ★ என். திருச்செல்வம் — கொழும்புத்துறை.
- ★ சி. சரஸ்வதி — நாவாலி
- ★ ச. கபிரியேற்பிள்ளை — கிராம சேவையாளர், நவாலி.
- ★ சு. இராசம்மா — சுழிபுரம்.
- ★ செ. தவராணி — நவாலி.
- ★ மா. சிதம்பரம் — தொல்புரம் மத்தி.
- ★ சி. மகேஸ்வரி — தொல்புரம் மத்தி.
- ★ பா. உதயராசன் — வயது 24.
- ★ ஜி. பிரதீபன் — மானிப்பாய்.
- ★ சசிகலா — வயது இரண்டரை, சாவகச்சேரி.
- ★ பாலயோகினி — வயது 35, உடுவிலைச் சேர்ந்தவர்.
- ★ பாலயோகினியின் மகள் மலர்விழி — வயது 13.
- ★ வீ. சற்குணராஜா — வயது 30, நவாலி.
- ★ ப. இந்திரகுமார் — சுழிபுரம் மேற்கு.
- ★ ஏ. தனுஷ்ரலா — வயது 8, நவாலி.
- ★ பி. சாந்தன் — சுழிபுரம் மேற்கு.
- ★ நா. கோபாலகிருஷ்ணன் — வயது 29, சுழிபுரம் மேற்கு.
- ★ கோ. மதிவதனா — வயது 22, சுழிபுரம் மேற்கு.
- ★ கோ. பிரதீபன் — சுழிபுரம் மேற்கு.
- ★ ந. முருகதாஸ் — சுழிபுரம் மேற்கு.
- ★ என். அபிராமி — உயரப்புலம்.
- ★ கோ. கபில்ராஜ் — நவாலி.
- ★ கோ. வினோதி — நவாலி.
- ★ கோ. ரேவதி — நவாலி.
- ★ சி. நாகரட்ணம் — நவாலி.
- ★ க. சாவித்திரி — வயது 40, நவாலி.
- ★ க. கமலாதேவி — வயது 88, நவாலி.
- ★ எஸ். ஜெயசீலன் — நாவாந்துறை.
- ★ செ. இராசதுரை — நவாலி.
- ★ இ. சந்திரகாந்தன் — நவாலி.
- ★ இ. மகேஸ்வரி — நவாலி.
- ★ இ. சுதா — நவாலி.
- ★ இ. சரஸ்வதி — நவாலி.

நேற்றைய இராணுவத் தாக்குதல்களில் உயிரிழந்த பல பொதுமக்களின் சடலங்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டன. அவற்றில் அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் ஆஸ்பத்திரியிலிருந்து எடுத்து செல்லப்பட்ட சடலங்களின் விவரம் வருமாறு:—

- ★ ந. தியாகராஜா — ஆனைக்கோட்டை.
- ★ இ ஆனந்தராஜா — ஆனைக்கோட்டை.
- ★ த. குலசிங்கம் — வயது 70, உடுவில்.
- ★ க. சிவபாதசுப்பிரமணியம் — வயது 50, இணுவில்.
- ★ எஸ். தேவராசா — வயது 45, இணுவில்.
- ★ திருமதி. தே. பாலசரஸ்வதி — வயது 42, இணுவில். தேவராஜா, பாலசரஸ்வதி தம்பதிகளின் மூன்று பிள்ளைகளான —
- ★ சைலஜா — வயது 12.
- ★ லாவண்யா — வயது 10.
- ★ மனோஜியா — வயது 8.
- ★ வன்னியசிங்கம் — கிராமசேவையாளர், தெல்லிப்பழை.
- ★ தவலட்சுமி — மானிப்பாய்.

## தென்மராட்சி பகுதிக்கு 500 மெற்றிக் தொன் மா

### நேற்று அனுப்பப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூலை 11

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு வழங்க நேற்று 500 மெற்றிக் தொன் மா அங்கு கொண்டு செல்லப்பட்டது.

இடம் பெயர்ந்த மக்கள் தமக்கு தேவையான மாவை பணத்துக்கு அங்குள்ள மூன்று ப. நோ. கூ. சங்கங்களிலும் கொள்வனவு செய்யலாம் என்று யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

லக்ஸ்பிறே பால் மாவும் அங்கு அனுப்பப்பட்டுள்ளது.

இதே வேளை — தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்கு புதிதாக இடம் பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களுக்கு வெளியே தங்கியுள்ளவர்களை இலவச உலர் உணவு பெறுவதற்காக அவ்வப்பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொண்டு தமது குடும்ப விவரங்களை கொடுத்தவுமாறு சாவகச்சேரி பிரதேச செயலர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை கேட்டுள்ளார். [ஐ-3]

### உறவினர்களைத் தேடி

## யாழ் ஆஸ்பத்திரிக்கு மக்கள் படையெடுப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 11

ஷெல், குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பொது மக்களின் விவரங்களை அறிவதற்கு அவர்களது உறவினர்கள் நேற்றுக் காலை அங்கு படையெடுத்தபடி இருந்தனர்.

இறந்த நூற்றுக்கும் மேற்பட்டோரின் சடலங்களை அடையாளம் காணவும் மக்கள் ஆஸ்பத்திரிப் பகுதிக்குத் திரண்டனர்.

அவர்களைக் கட்டுப்படுத்த முடியாது பாதுகாப்பு ஊழியர்களும், தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்தோரும் திணறிப் போய்விட்டனர்.

இதேவேளை, யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் பலரும் குடும்பத்துடன் இடம் பெயர்ந்துவிட்டதால், நேற்று ஊழியர்களின் வரவு மிக மந்தமாக இருந்தது. (ஓ-13)

# நவாலித் தாக்குதல் படையினர் மறுப்பு

ஆம்ஸ்டராம், ஜூலை 11

நவாலியில் தேவாலயப் பகுதி மீது ஸ்ரீலங்கா அரசப் படைகள் குண்டு வீச்சுத் தாக்குதல் எதனையும் நடத்தவில்லை என ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க தெரிவித்திருக்கிறார்.

நெதர்லாந்து வானொலியில் அதன் கொழும்புச் செய்தியாளர் நீற்றா செபஸ்தியான் இத்தகவலை வெளியிட்டார்.

''இராணுவ நடவடிக்கை நடைபெறும் பகுதியில் அந்தத் தேவாலயம் இல்லை. அதனால் அது தாக்கப்படவில்லை என நான் திட்டவட்டமாகக் கூறுகின்றேன்.''

''இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகப் போகின்றது என மக்களுக்கு நாம் ஏற்கனவே அறிவித்துவிட்டோம். அதனால் இராணுவ நடவடிக்கையில் சிக்கி நூற்றியம்பது பொதுமக்கள் இறந்தனர் என்பது உண்மையாக இருக்காது. உயிரிழந்த தமது உறுப்பினர்களை பொதுமக்கள் என புலிகள் கணக்குக் காட்டியதால் இத்தொகை வந்திருக்கக்கூடும்.

''இராணுவ நடவடிக்கை எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும்? எப்போது முடியும்? எப்பகுதி வரை விஸ்தரிக்கப்படும்? — என்ற கேள்விகளுக்கு பதில் கூறமுடியாது. இராணுவ ரகசியங்களை வெளியிட முடியாது.''

''எமது செயற்பாடு தொடரும். புலிகளின் பிடியிலிருந்து பொதுமக்களை விடுவிக்கும் முயற்சி நீடிக்கும்.''

விடுவிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள மக்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.'' — இவ்வாறு பிரிகேடியர் முனசிங்க மேலும் கூறினார். [உ-3]

## லியோ கழகத்தினருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 11

பரியோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி லியோ கழகத்தினரையும் யாழ். வட்ட லியோ கழகத்தினரையும் இன்று செவ்வாய் காலை 8-30 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் சமூகம் அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ)

## கொழும்பு ஆஸ்பத்திரியில் ஹெலி இறங்கு தளம்!

கொழும்பு, ஜூலை 11

யுத்தத்தில் காயமடையும் படையினருக்கு விரைவாக சிகிச்சை அளிக்கும் பொருட்டு கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு அருகில் ஹெலிக்கொப்ரர் இறங்குதளம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து இராணுவத்தினருடனும், பொலிஸாருடனும் ஆஸ்பத்திரி அதிகாரிகளுடனும் சுகாதார சமூக சேவைகள் நெடுஞ்சாலை அமைச்சர் ஏ. எச். எம். பௌசி பேச்சு நடத்தினார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட படையினருக்கு ஆக [illegible] என்று அவர் உறுதியளித்துள்ளார். [ஐ-4]

## 200 பொதுமக்கள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எம் காணமுடியாது உள்ளது.

இவை தவிர மீட்கப்படாத பல சடலங்களும் உள்ளன.

மருத்துவமனைகளுக்கு வராத நிலையிலும் பல சடலங்கள் உறவினர்களால் எரிக்கப்பட்டுள்ளன.

கடந்த இரு தினங்களில் 350க்கும் அதிகமான மக்கள் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பலர் குடும்பம் குடும்பமாக கொல்லப்பட்ட பரிதாபகரமான சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன.

நேற்று முன்தினம் நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்திலும், அதன் சுற்றுப்புறத்திலும் புக்காரா விமானம் ஒரே தடவையில் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கை நூற்றியிருபதைத் தாண்டியுள்ளது.

இராணுவத் தாக்குதலால் இடம்பெயர்ந்தவர்கள் நவாலி தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தவேளையில் அதன்மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து நூற்றியிருபது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்படாத நிலையிலும் மேலும் சடலங்கள் உள்ளன.

நேற்று குண்டுவீச்சு விமானங்கள் மக்கள் குடியிருப்புகள் மீது நடத்திய கண்மூடித்தனமான தாக்குதலில் 20கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணிக்கு வந்த புக்காரா விமானம் மூன்று இடங்களில் நடத்திய தாக்குதலின் போது 5 அப்பாவி மக்கள் உடல் சிதறிப் பலியானார்கள்.

இவர்களில் யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட 3 ஆம் வருட மாணவியான ந.ஜெயசுதாவும் அடங்குவார்.

இதன் பின் புக்காரா விமானம் நடத்திய மற்றொரு தாக்குதலில் ஐவரும் —

அதன் பின் 10-30 மணியளவில் சுப்பசொனிக் விமானம் நடத்திய தாக்குதலில் ஐவரும் —

ஷெல் தாக்குதலில் ஐவருக்கு மேற்பட்டவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகமாகக் கூடும்.

கொல்லப்பட்டவர்களின் முழுமையான விவரங்களை சரியாக எடுக்க முடியாத அளவில் தொடர்ந்து தாக்குதல்களை படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இடம்பெயரும் மக்கள் மீதும் முப்படையினர் இலக்கு வைத்து தாக்குதலை நடத்தினறனர்.

நேற்று மொத்தம் நூறுக்கு மேற்பட்ட மக்கள் படுகாயமடைந்தனர்.

படையினரின் தாக்குதலில் கடந்த இரு தினங்களிலும் 63 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

போதனா வைத்தியசாலை புள்ளி விவரங்களில் இருந்து இது தெரிய வந்தது.

நூற்றியிருபத்தைந்து சிறுவர்கள் காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். — என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-4)

## நேற்றைய தாக்குதல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

- ★ சுப்பிரமணியம் சிவகாமி — வயது 50, வடலியடைப்பு.
- ★ க. பரமேஸ்வரன் — வயது 25, ஆனைக்கோட்டை.
- ★ க. சுந்தரநாதன் — வயது 45, வடலியடைப்பு.
- ★ சாந்தலூஷியா — வயது 65, வடலியடைப்பு.
- ★ தியாகராஜா பிருந்தா — வயது 23, ஆனைக்கோட்டை, இவரின் தகப்பனார் ஷெல்லினால் உயிரிழந்தார்.
- ★ காண்டீபன் — வயது 15, வடலியடைப்பு.
- ★ குமார் — வயது 36, ஆனைக்கோட்டை.
- ★ சி. நாகேஷ் — வயது 30, சண்டிலிப்பாய்.
- ★ எல். ரமணன் — வயது 18, சண்டிலிப்பாய்.
- ★ சின்னையா — வயது 70, அளவெட்டி.
- ★ ஜீவகாந்தன் — வயது 8, அளவெட்டி.
- ★ சண்முகலிங்கம் வயது 48, அளவெட்டி,
- ★ செ. கவிதா — வயது 14, நவாலி.
- ★ ப. தங்கரட்ணம் — வயது 25, ஆனைக்கோட்டை.
- ★ ருக்மணி — வயது 24, நவாலி.
- ★ பிரதீபன் — வயது 12, நவாலி.
- ★ ஆ. சசி — வயது 28, நவாலி.
- ★ செல்வராஜா — வயது 24, நாவாந்துறை.
- ★ நாகேஸ்வரி — வயது 32, மயிலாகம்.
- ★ பி. மகேஸ்வரன் — வயது 34, நவாலி.
- ★ சபாரத்தினம் — வயது 63, ஆனைக்கோட்டை.
- ★ எஸ் பூபாலசிங்கம் வயது 35, வட்டுக்கோட்டை.
- ★ தவராஜினி — வயது 22 சங்கானை
- ★ ரி. துஷ்யந்தி — வயது 20, சண்டிலிப்பாய்
- ★ ரி. துஷ்யந்தன் — வயது 14 சண்டிலிப்பாய்
- ★ அகளங்கன் — வயது 18, சண்டிலிப்பாய்
- ★ ரவிக்குமார் — வயது 11, சித்தன்கேணி
- ★ சுப்பிரமணியம் — வயது 26, சித்தன்கேணி
- ★ முருகேசு செல்லம்மா — வயது 48, சங்கானை
- ★ கந்தையா செல்வந்தராணி — வயது 30, சங்கானை
- ★ நாராயணசிங்கம் நித்தியானந்தலட்சுமி — வயது 50, அராலி — இவரின் கணவர் ஷெல் தாக்குதலில் உயிரிழந்தார்.
- ★ நாராயணசிங்கம் — பரணீதரன் வயது, 20
- ★ நாராயணசிங்கம் தரணீதரன் — வயது 18
- ★ இராசகுலசிங்கம் ராஜ்குமார் — வயது 16, அராலி
- ★ பொன்னையா வைத்திலிங்கம் — வயது, 75 கட்டுடை
- ★ தம்பு நாகம்மா — வயது 45, மூளாய்
- ★ கே. இராசலிங்கம் — வயது 44, கொக்குவில்
- ★ இராசலிங்கம் ஞானேஸ்வரதேவி — வயது 43' கொக்குவில்
- ★ இரத்தினம் பாலாம்பிகை — வயது 72, கொக்குவில்
- ★ கிருஸ்ணமூர்த்தி கலைவாணி — வயது 44, கொக்குவில்
- ★ கணேஷ் நடேசகுமார் — வயது 36 ஆனைக்கோட்டை
- ★ சிற்பபேசன் கேந்திரகுமார் — வயது 36, ஆனைக்கோட்டை
- ★ கு. பத்மநாதன் — வயது 41, ஆனைக்கோட்டை
- ★ பத்மநாதன் அரவிந்தன் — வயது 15, ஆனைக்கோட்டை
- ★ கு. கேசவன் — வயது 10, ஆனைக்கோட்டை
- ★ கு ஜனார்த்தனன் — வயது 11, ஆனைக்கோட்டை
- ★ கு கலையா — வயது 20, ஆனைக்கோட்டை
- ★ விசுவலிங்கம் — வயது 75, கொக்குவில்
- ★ இராஜேந்திரன் — வயது 64, கொக்குவில்
- ★ கமலாம்பிகை — வயது 42, கொக்குவில்
- ★ சுதா — வயது 21, கொக்குவில்
- ★ தினேஷ் — வயது 10, கொக்குவில்
- ★ ச. காண்டீபன் — வயது 14, இணுவில்
- ★ சி. சிவானந்தன் — வயது 38, இணுவில்
- ★ த. அன்னலட்சுமி — வயது 40,
- ★ இ. சரஸ்வதியம்மா — வயது 65, இணுவில்
- ★ திருநாவுக்கரசு மகாதேவி — வயது 67, சங்கரத்தை
- ★ திருநாவுக்கரசு ஜெயகுணேஸ்வரி — வயது 20, சங்கரத்தை
- ★ கந்தசாமி ருக்குமணி தேவி — (வயது 45), தாவடி
- ★ கந்தசாமி சோபனா — (வயது 9), தாவடி
- ★ கந்தசாமி ஜீவகாந்தன் (வயது 7), தாவடி
- ★ கந்தசாமி நிவேகா — (வயது 10), தாவடி
- ★ கந்தசாமி ரமீனா — (வயது 12), தாவடி
- ★ இன்னாசிமுத்து ராஜினி — (வயது 20), உரும்பராய்
- ★ கே. கோமதி — வயது 25 தாவடி
- ★ என் சுபாஷ்கரன் — வயது 39, தாவடி.
- ★ செல்லத்துரை — வயது 29, தாவடி
- ★ குருசாமி மகேஸ்வரி — வயது 55, தாவடி.
- ★ எட்வின் — வயது 18, அளவெட்டி — துப்பாக்கிச் சூட்டுக் காயம்.
- ★ செ. செல்வநாயகம் வயது 32, சுழிபுரம் வாசி, சங்கானையில் துப்பாக்கிச் சூட்டுக் காயம். (ஐ உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பரஞ்சோதி சிவதாஸ் (கரன)

காரைநகர் குமிழங்குளியைப் பிறப்பிடமாகக் கொண்ட பரஞ்சோதி சிவதாஸ் (சரன்) 10-7-95 (திங்கட்கிழமை) வீரமரணம் அடைந்துவிட்டார்.

அன்னார் பரஞ்சோதி (நியூ ராஜா ஸ்ரோஸ், வவுனியா)- நேசரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், சிவகௌரி, சிவநிசன் [லண்டன்], சிவரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவபாதசுந்தரத்தின் [ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடத்திணைக்களம், யாழ்ப்பாணம்], அன்பு மைத்துனரும், சஜீவன் சரஞ்ஞா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
க. பாலசுப்பிரமணியம்
[ரஞ்சனான்]

172/3, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம் [37477]

## பிலிப்புப்பிள்ளை கபிரியேற்பிள்ளை

[கிராமசேவையாளர், சில்லாலை]

பிலிப்புப்பிள்ளை கபிரியேற்பிள்ளை (கிராம சேவையாளர், சில்லாலை) 09-07-95 அன்று அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற சில்லாலையைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை பிலிப்புப்பிள்ளை - பிலிப்புப்பிள்ளை றோசமுத்து தம்பதிகளின் மகனும், சங்குவேலி வடக்கு தவமணி தம்பு (இளைப்பாறிய ஆசிரியை) யின் அன்புக் கணவரும், கௌரி, நிமலன், காலஞ்சென்ற சுகுணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பேணடேற் பாலசிங்கம் - நல்லம்மா, விக்ரோறியா அந்தோனிப்பிள்ளை - செல்லம் [இளைப்பாறிய ஆசிரியை], அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய பிரதி ஆணையாளர், உள்நாட்டுஇறைவரித் திணைக்களம்), மரியம்மா யோக்கின்பிள்ளை - பாக்கியம் [இளைப்பாறிய ஆசிரியை], காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை [சந்திரன்] [யாழ். ஹட்டன் நஷனல் வங்கி], அன்னம்மா அந்தோனிப்பிள்ளை [அன்னம்] [இளைப்பாறிய ஆசிரியை], மற்றில்டா இம்மனுவேல் [ராணி], செலஸ்தின்பிள்ளை [இராசதுரை] [மனேஜர், மெய்கண்டான் கொழும்பு], பற்றிக் இம்மனுவேல் [துரைராசா] ஆகியோரின் சகோதரரும், எமிலி சபாபதி, காலஞ்சென்ற வண. பிதா சாம் தம்பு, அருட்பிரகாசம் [ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்], நேசம்மா சிங்கராஜா, ஜெயபாக்கியம் யோன்ராஜா, காலஞ்சென்ற ஜேம்ஸ்தம்பு (இளைப்பாறிய விதானர், கல்வித் திணைக்களம்), ஞானம்மா புனிதராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நுணாவில் மேற்கு, Dr. சிங்கராஜாவின் இல்லத்திலிருந்து இன்று [11-07-95] காலை 9-00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, சாவகச்சேரி றோ. க. சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
மனைவி

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி. [37464]

## திருமதி புஸ்பம் இரத்தினவேல்

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி புஸ்பம் இரத்தினவேல் [இளைப்பாறிய ஆசிரியை, ஜெசிந்தா கல்லூரி பண்டத்தரிப்பு] அவர்கள் 9-7-95 இல் காலமானார்.

இவர் சுப்பையா இரத்தினவேல் [ஓய்வுபெற்ற ஆசிரியர்] அவர்களின் அன்பு மனைவியும், தாபோதினி (கொழும்பு), மகிபன், மகிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசின் [C D I என்ஜினியரிங் கொம்பனி, கொழும்பு] அன்பு மாமியாரும், திருமதி சுப்பையா தங்கமமாவின் [புங்குடுதீவு] அன்பு மருமகளும், கதிர்தம் முத்துராஜாவின் [கனடா] அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை புதன்கிழமை 12-07-95 காலை 10 மணிக்கு 40/18, சீனியர் ஒழுங்கை, கலட்டி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறும்.

தகவல்:
S. இரத்தினவேல்
[கணவர்]

[37476]

## செல்வி அஞ்சனாதேவி சிதம்பரப்பிள்ளை

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் மூளாய் பொன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற முருகேசு - சிதம்பரப்பிள்ளை தவோமணியின் அன்பு மகளும் - சண்முகரத்தினத்தின் அருமைச்சகோதரியுமான அஞ்சனாதேவி 10-7-95 ல் அகாலமரணமானார்.

இறுதிக்கிரியைகள் 10-7-95 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆறுமுகம் தங்கரத்தினம்
சகோதரங்கள்

135, 3 ஆம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம். [37472]

## குணப்பிரகாசம் சத்தியநாதன்

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியை வதிவிடமாகவும் கொண்ட குணப்பிரகாசம் சத்தியநாதன் 10-07-1995 நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான குணப்பிரகாசம் செல்லம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா தெய்வானைப் பிள்ளையின் மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும் ஜெய்னாவதாஸ், சந்திரதாஸ், ஜெயதாஸ், றமணதாஸ், பிறேமதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் மைதிலி, கீதாஞ்சலி ஆகியோரின் மாமனாரும், கௌதம், நவீன் ஆகியோரின் பேரனும் தருமகுணம், றங்கேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
து. றங்கேஸ்வரி
(மைத்துனி)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11-07-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பொலீஸ் காவல் நிலை மீது அனுராதபுரத்தில் தாக்குதல்

## 2 பொலீஸார் உட்பட ஐவர் பலி

அனுராதபுரத்திக்வெலாச்சி பகுதியில் பொலீஸ் காவல் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலில் இரு பொலிஸார், இரு ஊர்காவல் படையினர் மற்றும் ஒரு சிப்பாய் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர். இரு பொலீஸார் காயமடைந்தனர். [(ஐ-3-4)]

### யாழ். பல்கலைக்கழக ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்களுக்கான

# விசேட அறிவித்தல்

அண்மைய அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு வெளியேறிய நாலாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் பல்கலைக்கழகத்தில் தங்கியுள்ளனர். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதற்கு பல்கலைக்கழக மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களை இன்று செவ்வாய்க்கிழமை (11-7-95) காலையில் பல்கலைக்கழகத்தில் வந்து ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்.
யாழ். பல்கலைக்கழகம். (சி-1634)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவி

## செல்வி ஜெயத்தா நவரட்ணம்

[10-7-95] நேற்று காலை அகால மரணமானார். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்கட்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்

(37473)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட விஞ்ஞான பீட மாணவியாகிய

## செல்வி நவரெத்தினம் - ஜெயதா

அவர்களின் அகால மரணச் செய்திகேட்டு பேரதிர்ச்சியடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம்
யாழ்.பல்கலைக் கழகம்.
[37470]

# மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலி

09-07-1995ஆம் திகதி அகால மரணமடைந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களான திரு. கபிரியேற் பிள்ளை, செல்வி ஹேமலதா ஆகியோருக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தரான திரு. வன்னியசிங்கம் அவர்களுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர்களது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரதேச செயலர்
செயலக உத்தியோகத்தர்கள்,
கிராம உத்தியோகத்தர்கள்

பிரதேசசெயலகம்,
யாழ்ப்பாணம். (37475)

# 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 22 - 10 - 1917

மறைவு: 21 - 06 - 1995

## திருமதி அன்னமுத்து மார்க்கண்டு

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு ஆறுதலும், உதவிகளும் வழங்கியவர்களுக்கு எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவரது ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போமாக.

எமது இல்லத்தில் இன்று (11-07-1995) செவ்வாய்கிழமை நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதிய போசன வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

29/29, தேவாலய வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம். [illegible]

### தமிழர்களை அழிக்கும் நோக்கம் கொண்ட

# லீப் போவார்ட்டை உடன் நிறுத்த கோரி சந்திரிகாவுக்கு மகஜர்

படையினரின் ''லீப் போவார்ட்'' இராணுவத் தாக்குதல் நடவடிக்கைகள் இனரீதியாகவும், மனிதாபிமானமற்ற முறையிலும் தமிழ் மக்களை அழிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

பொதுமக்கள் மீதான ''லீப் போவேர்ட்'' தாக்குதலை உடனடியாக நிறுத்தி தமிழ் மக்களைப் பாதுகாக்குமாறு வேண்டுகிறோம்.

இவ்வாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நேற்று அனுப்பிய மகஜரில் கேட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

★ தமிழர்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து விடுவிப்பதற்காகவே இந்த இராணுவ நடவடிக்கை நடத்தப்படுவதாக உங்கள் அரசு இராணுவம், செய்தித்தாபனங்கள் அனைத்தும் பிரசாரம் செய்கின்றன. ஆனால் இங்கு நடந்த துயர சம்பவங்கள் இந்த இராணுவ நடவடிக்கைகள் மக்களை இனரீதியாகவும் மனிதாபிமானமற்ற முறையிலும் அழிப்பதையே நோக்கமாகக் கொண்டிருப்பதை தெட்டத் தெளிவாக்குகின்றன.

★ நிறைவேறிய 36 மணித்தியாலங்களின் பின்னர் கிடைக்கும் தகவல்களின் பிரகாரம் படைகளின் தாக்குதல்களால் 230 க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 100 க்கு மேற்பட்ட பெண்களும், 13 குழந்தைகளும் அடங்குவர். 350 க்கும் அதிகமான பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்களில் 250 பேர் படுகாயமுற்றனர்.

★ தாக்குதல் குறித்து இராணுவம் மக்களுக்கு முன்னறிவித்தல் கொடுத்ததாக அரசு பிரசாரம் செய்கிறது. ஆனால் அது கூறுவது போல துண்டுப் பிரசுரங்கள் விசப்படவும் இல்லை; தாக்குதல் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தவும் இல்லை.

★ கோயில்களுக்கும், பாடசாலைகளுக்கும் சென்று தங்குமாறு பொதுமக்கள் கேட்கப்பட்ட போதிலும் அங்கு தங்கியவர்கள் மீது குண்டு வீச்சு, ஷெல் வீச்சு நடத்தப்பட்டன. இதனால் பொதுமக்களுக்கு பாரிய உயிரிழப்பு ஏற்பட்டது.

குறிப்பாக நவாலி புனித பேதுரு சந்தோலிக்க ஆலயம், மாவிட்டபுரம் மருதடி விநாயகர் ஆலயம், வல்வெட்டித்துறை இந்து ஆலயம் என்பன மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

★ யாழ்ப்பாணம், பொது மருத்துவமனையில் ஒரேயொரு சத்திரசிகிச்சை நிபுணர் மட்டுமே பணிபுரிகிறார். என்றும், மருந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது என்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு சுட்டிக்காட்டியிருந்தது. ஆனால் அரசு அதனை உதாசீனம் செய்து இராணுவ நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது. அதனால் போதனா வைத்தியசாலைக்கு வந்து குவியும் காயப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியவில்லை.

★ குண்டு வீச்சுக்கு இலக்கானோரின் சடலங்கள் கருகிப்போய் காணப்படுகின்றன. அதனால் வீசப்படும் குண்டுகள் எரிகுண்டுகளாகவும், இரசாயன வகையாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ)

# தேவாலயம் மீது தாக்கு; யாழ். ஆயர் கண்டனம்

நவாலி சென். பீற்றேர்ஸ் தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்து யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அகதிகளாக தேவாலயத்தில் புகலிடம் தேடி வந்த மக்கள் மத்தியில் 'புக்காரா' பல குண்டுகளை வீசியதால் 65 க்கு மேற்பட்டோர் அந்த இடத்திலேயே மரணமானார்கள். இதில் பெண்கள், சிறுவர்கள் அடங்குவர் 150 க்கு மேற்பட்டோர் கடுமையாக காயப்பட்டுள்ளார்கள்—

இதனைவிட பல நூற்றுக் குமதிகமானோர் தமது வீடுகள் உடைமைகள் இழந்த நிலையில் இருக்கிறார்கள் இதில் எமது பங்குக்குருவின் பணிமனையும் அடங்கும்—

எனவே தாக்குகளின் போது பொது மக்கள் வதியும் இடங்களில் குறிப்பாக கோயில்கள், தேவாலயங்கள், பாடசாலைகள், மருத்துவ மனைகள் போன்றவற்றின் மீது போர் ஆயுதங்களை பாவிக்காதிருக்குமாறு தங்கள் இராணுவத்துக்கு உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன் —என்று யாழ். ஆயர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார். (அ

## 3 லட்சத்துக்கும்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இடம் பெயர்ந்த மக்களில் 50 வீதமானவர்கள் தென்மராட்சிப் பகுதிக்கு சென்றுள்ளதாகவும் —

அவர்கள் தங்குவதற்காக தென்மராட்சியில் உள்ள சகல பாடசாலைகளிலும் ஆரம்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் —

மேலும் அங்குமேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் குறித்து ஆராய செயலக அதிகாரிகள் இன்று அங்கு செல்வர் என்றும் —

மக்களுக்கு வழங்கத்தேவையான உணவுப்பொருள்கள் அங்கு அனுப்பப்படுவதாகவும் —

அங்கு சென்று பணியாற்ற அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் —

அவர் மேலும் தெரிவித்தார்.

தென்மராட்சிப் பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளமக்களின் அவசர தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைகளைக் கவனிப்பதற்காக யாழ். செயலகத்தின் இரு அதிகாரிகள் இன்று முதல் அங்கு பணியாற்ற விருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு சமைத்த உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அகதிகளுக்குத் தேவையான லாம்பு மற்றும் பாத்திர வகைகளை வழங்க வை, எம். சி.ஏ ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியன முன் வந்துள்ளன.

## தொடர்ந்து..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்தும் அகோர ஷெல் தாக்குதல் நடைபெற்று வருவதாலும் —

அங்கிருந்து பொதுமக்கள் அனைவரும் வெளியேறிவிட்டதாலும் —

சண்டை எங்கு நடைபெறுகின்றது என்பது குறித்தோ, படையினர் எங்கு நிலைகொண்டுள்ளனர் என்பது குறித்தோ ஊர்ஜிதப்படுத்தக் கூடிய எந்தத் தகவலையும் பெறமுடியவில்லை.

## இணுவில்,---

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெயர்ந்தனர்.

நேற்று இப்பகுதியில் இடம்பெற்ற குண்டு வீச்சில் உயிரிழந்த பதினொரு பேரின் விவரம் வருமாறு:-

இணுவிலில்

★ தேவராஜா (45 வயது)

★ தேவராஜாவின் மனைவி பாலசரஸ்வதி (42 வயது)

தேவராஜாவின் மூன்று பிள்ளைகளான —

★ சைலஜா [12 வயது]

★ வாவண்ய (10 வயது)

★ மனோஜியா (8 வயது)

★ சு. சிவபாதசுப்பிரமணியம் (வயது 50)

★ த. குலசிங்கம் (வயது 70)— உடுவில்

கொக்குவிலில்

★ இரத்தினம் கலாநிதி [வயது 40]

தாவடியில்

★ கந்தசாமி பிரசாந்தினி [வயது 5]

★ மற்றும் அடையாளம் காணப்படாத இரு பெண்களின் சடலம். [உ-15]

## ஆனைக்கோட்டைப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரம் வருமாறு:-

★ நடேசன் விஜயன் — 19 வயது, ஆனைக்கோட்டை.

★ வரதராஜா கிருஷ்ண குமார் — ஒன்றரை வயது, வடலியடைப்பு.

★ தியாகராஜா — வயது 65, ஆனைக்கோட்டை.

★ ஆனந்தராஜா — வயது 60, ஆனைக்கோட்டை.

★ வே. வன்னியசிங்கம் — கிராமசேவையாளர், தொட்டிலடி.

★ ச. தேவகுலசிங்கம் வயது 32, மூளாய்.

★ மற்றொரு அடையாளம் காணப்படாத — 25 வயது மதிக்கத்தக்க இளைஞர். [illegible] பெனியனும், நீலக் கோடு சரமும் அணிந்திருந்தார்.

லியோக்கழக உறுப்பினர்களுக்கு

# அவசர வேண்டுகோள்

We Serve

சகல லியோக் கழக உறுப்பினர்களையும் இன்று செவ்வாய்க்கிழமை 11-07-1995 யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் காலை 9 மணிக்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

லயன். கே துரைராஜா
வலயத் தலைவர்

[37474]

# மரண அறிவித்தல்

## தம்பு சண்முகம்

(முன்னைநாள் இ. போ. ச. நடத்துநர்)

வேலணை மேற்கைச் சேர்ந்தவரும், கல்வயல், சாவகச்சேரியை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தம்பு சண்முகம் அவர்கள் 9-7-95 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற தம்பு முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், இலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ராசலட்சுமி, இரத்தினசிங்கம், செல்லத்தம்பி,(ஜேர்மனி) வீரலட்சுமி, (ஜேர்மனி) நித்தியலஷ்மி (விரிவுரையாளர்,யாழ் பல்கலைக்கழகம்) காலஞ்சென்ற பவானி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தந்தையும், கமலாதேவி, தர்மசேகரன், உஷா ஆகியோரின் மாமனும், தர்மலிங்கம், கண்ணம்மா, சுப்பிரமணியம், ஆகியோரின் சகோதரரும், சண்முகலிங்கம், அவர்களின் மைத்துனரும், சோபனா, ரமேஸ், தினேஸ், கோபி, சர்மிளா, மதன், (ஜேர்மனி) துவாரகன், பிரியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக்கொள்ளவும். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [11-7-95]நண்பகல் 12 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
ச. இரத்தினசிங்கம்
(மகன்)

நுணாவில் கல்வயல் வீதி,
கல்வயல்,
சாவகச்சேரி. (37461)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org